**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

அசல் வழக்கு எண். 428/2010

நாள்: 07.10.2023

பெயர்: குனசேகரன் (வா.சா.1) த/பெ: பக்கிரிசாமி

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

வாதி தரப்பு குறுக்கு விசாரணை...

1) தாவா சொத்தின் சர்வே எண்ணில் மொத்த விஸ்தீரனம் 5 செண்ட் என்றால் சரிதான், அதில் 2.5 செண்ட் பொறுத்து மட்டுமட்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான், மேற்படி 5 செண்ட் நிலத்தை எங்கள் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து சலவை தொழிலாளிகள் அனுபவம் செய்வதற்காக கொடுத்தோம் என்றால் சரிதான், அதை சலவை தொழிலாளிகன் மீண்டும் எங்கள் குடும்பத்திற்கே கொடுத்துவிட்டார்கள், அதை அடைந்து எங்கள் 4 குடும்பத்தினரும் தலா 1.25 செண்ட் பாத்தியம் என்றால் சரிதான், என் தந்தைக்கும் 1, 2 பிரதிவாதிகளுக்கும் சேர்ந்து 2.5 செண்ட் பாத்தியம் என்றால் சரிதான்.

2) நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளதுபோல வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொள்ளவில்லை என்றாலும் அதன்படி பாக ஒப்பந்தம் ஏதும் செய்துகொள்ளவில்லை என்றாலும் சரியல்ல, தாவா சொத்து இன்றுவரை கூட்டுப்பட்டாவாகதான் உள்ளது என்றால் சரிதான், நான் Sub division செய்து கொள்வதற்காக எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றால் சரிதான், என் சகோதரர் மோகன் 15.07.2010 ல் எழுதி கொடுத்த தான செட்டில்மெண்ட் வா.சா.ஆ.1 அமுலுக்கு வரவில்லை என்றால் சரியல்ல, நானும் எனது சகோதரர் மோகனும் எந்தவிதமான பாக அட்டவணையும் செய்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல.

3) நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் 14.04.1992 ல் பாக ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டபடி தாவா சொத்து என் தந்தைக்கு பாகம் மூலம் கிடைக்கவில்லை என்றாலும், பின்னர் அவரது மகன்களான நானும் எனது

சகோதரரர் மோகன் என்பவரும் ஒன்றாக அனுபவித்து வரவில்லை என்றாலும், பின்னர் எங்களுக்குள் 1996 ல் ஏற்பட்ட பாகப்பிரிவினையில் எனது சகோதரருக்கு பாகத்தில் கிடைத்த சொத்தை என் பெயரில் 15.07.2010 ல் பதிவு செய்யப்பட்ட தான செட்டில்மென்ட் படி பாத்தியப்படுத்தி சுவாதீனம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, நான் சொல்வதுபோல் 1996 ல் எனக்கும் எனது சகோதரருக்கு இடையே பாக்பிரிவினை நடக்கவில்லை என்றால் சரியல்ல, 15.07.2010 ல் வா.சா.ஆ.1 ஆவனமானது விவகார நோக்குடன் ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல, மேலும் வா.சா.ஆ.1 ஆவனமானது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல,

4) நான் சொல்வதுபோல் 1992 ல் பாகப்பிரிவினை மூலம் தாவா சொத்து என் குடும்பத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல, தாவா சொத்தில் பிரதிவாதிகளுக்குள்ள உரிமை என் குடும்பத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல, 25.11.2010 அன்று பிரதிவாதிகள் தாவா சொத்தை ஆக்கிரமிக்க முயற்சி செய்யவில்லை என்றால் சரயில்ல, தாவா சொத்து இன்றுவரை என் அனுபவத்திலும், பிரதிவாதி அனுபவத்திலும் உள்ளது என்றால் சரியல்ல, பிரதிவாதிகள் தங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் சில சொத்துக்களை நாகமுத்துவிற்கு கிரயம் கொடுத்த காரணத்தினால் மட்டுமே தாவா சொத்து பாகம் பிரிந்துவிட்டதாக ஏற்றுக்கொள்ள முடியாது என்றால் சரியல்ல, தாவா சொத்து விபரம் சரியல்ல என்றாலும், தாவா தள்ளுபடியாக வேண்டும் என்றாலும் சரியல்ல,

(ஒப்பம்)திரு.S.கணேஷ்., எம்.காம்., எம்.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.